**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், வேடசந்தூர்**
**O.S.141/2003**
**நாள்.01.12.2025**

**வா.சா.2- சுப்பிரமணி**

**12ம் பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை**

1. நான் விவசாயம் செய்து வருகிறேன். வாதிகள் எனக்கு உறவினர்கள் என்றாலும், பக்கத்து வீட்டுக்காரர்கள் என்றாலும் சரிதான்.

2. சாட்சியம் அளிக்க நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை எதுவும் வரவில்லை என்றாலும், 3ம் வாதி அழைத்ததன் பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றாலும் சரிதான்.

3. நிரூபண வாக்குமூலத்தில் உள்ள விவரங்களை 3ம் வாதி சொல்லிதான் தயார் செய்யப்பட்டது என்றால் சரிதான்.

4. வாதிகள் என்ன பரிகாரம் கோரி யார் மீது எந்த சொத்திற்கு வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்ற விவரம் தெரியாது என்றால் சரியல்ல,

5. சடையப்பகவுண்டரின் மூத்த தாரத்தின் மகன் சவடமுத்து, இளையதாரத்தின் மகன் சத்தியமூர்த்தி என்றால் சரிதான்.

6. சத்தியமூர்த்தி மின்சாரதுறையில் வேலை பார்த்து வந்தார் என்றால் சரிதான். அவர் வேலை பார்த்து வந்த சமயத்தில் மின்சாரம் தாக்கி இறந்துவிட்டார் என்றால் சரிதான். அவரின் இறப்பிற்கு பின்னர் பணபலன்கள் அனைத்தும் அவரது மனைவி பொன்னம்மாளுக்கு கிடைத்தது என்றால் சரிதான். இறந்துபோன சத்தியமூர்த்தியின் பென்சன் தொகையை பொன்னம்மாள் தான் இதுவரை பெற்று வருகிறார் என்றால் சரிதான்.

7. 3ம் வாதி காளிமுத்து கேட்டுக்கொண்டதன்பேரில் பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

*Take down by me in open court and Read over to the witness and interpreted to him/her in Tamil and admitted by him/her to be correct*

B.Peter
Digitally signed by B.Peter
Date: 2026.01.28 17:22:38 +0530

**Principal District Munsif**
**Vedasandur**